20.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### "கால்நடைகளுக்கு காப்பீடு செய்து இழப்பீடு பெறலாம்'

கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு காப்பீடு செய்து இழப்பீடு பெறலாம்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா. சவாண் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: குமரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலமாக கால்நடைகளுக்கு காப்பீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. விவசாயிகள் தாங்கள் வளர்க்கும் கால்நடைகள் திடீரென நோயுற்றாலோ அல்லது இயற்கை சீற்றத்தினால் இறந்துவிட்டாலோ அதனை ஈடு செய்யும் விதமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கால்நடையின் மதிப்பு ரூ. 20 ஆயிரத்துக்கு ஒரு வருடம் வரையிலும் காப்பீடு செய்ய தேவைப்படும் தொகை ரூ. 500 இல் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை 50 சதவீதம் வழங்குகிறது. மீதமுள்ள 50 சவீதம் பயனாளியால் வழங்கப்பட வேண்டும்.

அதற்கு மேல் மதிப்பிற்கோ அல்லது ஒரு வருடத்திற்கு கூடுதலாகவோ பயனாளி காப்பீடு செய்ய விரும்பினால் தேவைப்படும் காப்பீட்டுத்தொகை பிரீமியம் பயனாளியால் செலுத்தப்பட வேண்டும்.

ரூ.500 காப்பீட்டுத்தொகை பிரீமியத்திற்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு மானியம் கூடுதலாக ரூ.100 அரசால் வழங்கப்படும். ஒரு பயனாளிக்கு 5 பசுக்கள் வரை காப்பீடு செய்யப்படும். காப்பீடு செய்யப்படும் கால்நடைகள் கால்நடை உதவி மருத்துவரால் மதிப்பீடு செய்யப்பட்டு காதில் வில்லைகள் போடப்பட்டு அடையாளப்படுத்தப்படும்.

காப்பீடு செய்யும் கறவை பசுவின் பயனாளியும் சேர்த்து காதுவில்லை எண் தெரியும்படியாக நிழல்படம் எடுத்து பசுக்கள் காப்பீடு செய்யப்படும். பயனாளிகள் காதுவில்லைகள் தொலையாதபடி கவனமாக பார்த்துக் கொள்ளவேண்டும். ஒருவேளை தொலைந்துவிட்டால் காப்பீடு செய்த அருகிலுள்ள கால்நடை உதவி மருத்துவருக்கு உடனே தகவல் தெரிவிக்க வேண்டும். எனவே கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகளை இத்திட்டத்தின் கீழ் காப்பீடு செய்து கால்நடைகளுக்கு திடீர் இறப்பு நேரும்போது அதிலிருந்து தங்கள் பொருளாதார இழப்பை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சூரிய கூடார உலர்த்தி அமைக்க 50% மானியம்: விவசாயிகள், மீனவர்களுக்கு அழைப்பு

தூத்துக்குடி மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிகழ் நிதியாண்டில் மிளகாய், வாழை, தேங்காய் மற்றும் இதர பழங்கள், காய்கனிகளை உலர்த்தும் பொருட்டும், மீன்களை கருவாடாக உலர்த்தும் பொருட்டும், சூரிய கூடார உலர்த்தி அமைப்பதற்கு மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

வேளாண் உற்பத்திப் பொருள்களை அறுவடைக்குப்பின் விற்பனைக்கு முன் சீராகவும், சுகாதாரமான முறையிலும் அதிக உலர்த்தி மதிப்பு கூட்டும் வகையில் சூரிய கூடார உலர்த்தி உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மீன்களை அதிக உலர்திறனுடன் விரைவில் கருவாடாக உலர்த்த முடியும். தங்கள் உபயோகத்திற்கு போக மீதமுள்ள நாள்களில் சூரிய கூடார உலர்த்தியை குறைந்த வாடகைக்கு விட்டு பராமரிப்பு செலவுகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் குறைந்தபட்ச நிலப்பரப்பு அளவு உத்தேசமாக 400 சதுர அடி. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூ 4 லட்சம். அதிகபட்ச நிலப்பரப்பு அளவு உத்தேசமாக 600 சதுர அடி. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூ. 6 லட்சம்.

இத்திட்டத்தின் கீழ் சூரிய கூடார உலர்த்தி அமைப்பதற்கு விவசாயி அல்லது விவசாய குழுக்களுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு அவர்கள் சொந்த நிலத்திலும் விவசாய குழுக்களுக்கு பொது இடங்களில் அல்லது அவர்கள் பட்டா நிலத்தில் (அரசாங்கத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட இடம்) சூரிய கூடார உலர்த்தி அமைத்து தரப்படும். இது தொடர்பான விவரங்கள் பெறுவதற்கும் விண்ணப்பங்களை பதிவு செய்வதற்கும் கோவில்பட்டி, விளாத்திகுளம், புதூர், கயத்தாறு, ஓட்டப்பிடாரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 27ஏ எட்டையபுரம் பிரதான சாலை, கனரா வங்கி பின்புறம், கோவில்பட்டி என்ற முகவரியிலும், தூத்துக்குடி, கருங்குளம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் உதவி செயற் பொறியாளர் வேளாண்மைப் பொறியியல் துறை, 4122 அ1 ஸ்டேட் பாங்க் காலனி வடக்கு, ஆறுமுகச்சாமி காலனி அருகில், தூத்துக்குடி என்ற முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

திருச்செந்தூர், உடன்குடி, ஆழ்வார்திருநகரி, சாத்தான்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் உதவி செயற் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 6510ஸ்ரீ முத்து மாலை அம்மன் கோவில் தெரு, திருச்செந்தூர் என்ற முகவரியைத் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புளிய மர மகசூல்: நடவடிக்கை எடுக்குமா வனத் துறை?

ஆம்பூர் அருகே ஊட்டல் காப்புக் காட்டில் உள்ள புளிய மரங்களின் மகசூலை அதிகரிக்க வனத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது அனைத்துத் தரப்பு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம் ஆம்பூர் வனச் சரக எல்லைக்கு உள்பட்ட மிட்டாளம் ஊராட்சி பகுதியில் ஊட்டல் காப்புக் காடுகள், துருகம் காப்புக் காடுகள் உள்ளன. சுமார் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பரளவுக்கு மேல் வனப் பகுதி அமைந்துள்ளது.

இந்த வனப் பகுதியில் பிக்கலமலை, மால்பால் பண்ட, சாரமலை, கொட்டு பண்ட (மாட்டு பாறை), குடுமி சுனை, கொருக்கு ஊட்டல், கெத்தலபண்ட (பருந்து பாறை), புளியடிச்சான் மத்திமரம்,

முண்டபரியான் கானாறு, ஜலமாரி, தாமரை சுனை, சாக்கரேவு (வண்ணான் பாறை), பரமேரி கொல்லை, கம்மாளன் கிணறு, கொத்தூர் கணவாய் ஆகியவை இந்த காடுகளின் எல்லைகளாக உள்ளன. இந்த வனப் பகுதியில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புளிய மரங்களும், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மணி பூவாங்காய் எனும் பூவாங்காய் மரங்களும் உள்ளன.

2000-2001-ஆம் ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்தக் காடுகளில் உள்ள புளிய மரங்கள் மகசூல், பூவாங்காய் மர மகசூல் அமோகமாய் இருந்தது. நெடுஞ்சாலைகளில் விளையும் புளியின் சுவையை விட காடுகளில் கிடைக்கும் புளியின் புளிப்பு சுவை அதிகமாக இருக்கும்.

அதேபோல காடுகளில் விளையும் மகசூலை சேகரித்து, கொட்டை நீக்கி, தரம் பிரிப்பது எளிது. அதனால், ஊட்டல் காப்புக் காடுகளில் விளையும் புளியம் பழம், பூவாங்காய் மகசூலை ஏலம் எடுக்க பலத்த போட்டி நிலவும். பூவாங்காய் மர மகசூல் என்பது

புளியமர மகசூலுக்கு இணையாக இருக்கும். இந்த பூவாங்காய்களைப் பறித்து, நன்கு உலர்த்தி, பதப்படுத்தி வாசனைப் பொருள்கள், எண்ணெய் திரவியங்கள், ஷாம்பூ போன்றவை தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. ஏலம் எடுத்தவருக்காக, காட்டுப் பகுதியை ஒட்டியுள்ள மக்கள் காடுகளுக்குச் சென்று பூவாங்காய்களை பறித்து வந்து, எடை போட்டு நல்ல கூலி பெற்று வந்தனர். இப்போது அந்த பூவாங்காய் மர மகசூலும் அறவே இல்லாமல் போனது.

ஊட்டல் காடுகளில் புளியமர மகசூல், பூவாங்காய் மர மகசூல் குறைந்தது ஏன் என்றும், இதற்கு முந்தைய காலங்களில் விளைந்தது இப்போது விளையாமல் போனது ஏன் என்றும் பார்க்கும் போது, முன்பெல்லாம் ஆடு, மாடுகள் காடுகளுக்கு மேய்ச்சலுக்காக அழைத்துச் செல்லப்படும்.

வனப் பகுதியில் கால்நடைகள் தங்கி ஓய்வு எடுக்கும்போது அவற்றின் சாணம் மரங்களுக்கு உரமாய் அமையும். தற்போது கால்நடைகள் வனப் பகுதிகளுக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. மேலும், இந்த ஊட்டல் காப்புக் காடுகளில் முற்காலங்களில் உருவாக்கப்பட்ட நீர் நிலைகளான

ரெங்கையன் கிணறு, சேஷவன் கிணறு, தேன் கல் கானாறு கிணறு, பொட்டிவீட்டு கொல்லை கிணறு, பரமேரி கொல்லை கிணறு, கூனன் கிணறு, கம்மாளன் கிணறு போன்ற காடுகளில் வெட்டப்பட்ட கிணறுகள் முற்றிலும் தூர்ந்து போய் உள்ளன.

எனவே மேற்கண்ட காடுகளில் உள்ள கிணறுகளைத் தூர் வாரி, புதர் மண்டிக் கிடக்கும் முள்புதர்களையும் அகற்றி, முறையாக வாய்க்கால்கள் அமைத்து நீரைத் தேக்கி வைக்க ஆவன செய்ய வேண்டும். அதன்மூலம் இந்த மகசூலைத் தரும் மரங்களுக்கு நிலத்தடி நீர் வளம் கிடைக்கும். காட்டில் வாழும் உயிரினங்களுக்கும், பறவையினங்களுக்கும் போதிய தண்ணீர் கிடைக்கும்.

அதேபோல் பரந்து விரிந்துள்ள இக்காடுகளில் மிகப்பெரிய நீர் நிலைகளான 10 ஏக்கர் பரப்பில் உள்ள வரதம்மா ஏரி, 20 ஏக்கர் பரப்புக்கும் மேல் உள்ள பொழிச்சனேரி, 5 ஏக்கர் பரப்பில் உள்ள உடுத்தல குட்டை ஏரி, 40 ஏக்கருக்கும் மேல் உள்ள பரமேரி, கும்பு புளியமரம் குட்டை, துலுக்கன் கானாறு குட்டை, கொய்யாமரத்து குட்டை, ஆலமரத்து குட்டை போன்ற பரந்து விரிந்துள்ள நீர் நிலைகளையும் தூர்வார வேண்டும். சிதிலமடைந்த அதன் கரைகளையும் சீர்படுத்தினால் இந்த காடுகளில் ஆங்காங்கே பரவலாக தண்ணீர் தேங்கும். இதனால் புளிய மர மகசூல், பூவாங்காய் மர மகசூலோடு எலந்தை பழம், சூரைப்பழம், காரப்பழம், சின்ன சொத்த களக்காய் பழம், பெரிய சொத்தகளக்காய் பழம், விளாம்பழம், கம்பி பழம், தும்பி பழம், ஆலம்பழம், நாவல் பழம், புல்லாலக்கா பழம் போன்ற சுவையான பழ வகை மரங்கள், செடிகள் மீண்டும் விளைச்சல் தர ஆரம்பிக்கும். இந்த நீர் நிலைகளில் நீர் ஊறுவதால் தற்போது காடுகளில் வளராமல் போயுள்ள பூமியில் இருந்து விளையும் மாவடி கிழங்கு, காட்டுகார் கிழங்கு, சக்கரவர்த்தி கிழங்கு, பாட்டிமா கிழங்கு, காட்டு பனங்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளும் இந்த காடுகளில் வளர வாய்ப்புள்ளது.

சமையலுக்குத் தேவையான புளியை அண்டை மாநிலங்களில் இருந்து அதிக விலை கொடுத்து வாங்குவதை விட, கண் எதிரே உள்ள இந்தக்

காடுகளை முறையாகப் பாதுகாத்து, பராமரித்தால் வேலூர் மாவட்டத்துக்கான புளியைப் பெறலாம் என்பதே இயற்கை ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## 40 அடியாக உயர்ந்தது அமராவதி அணை நீர்மட்டம்

உடுமலை அருகே உள்ள அமராவதி அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி 40 அடியை எட்டியது.

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

மேலும், நூற்றுக்கணக்கான கரையோர கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்கி வருகிறது.

இந்நிலையில், கேரளத்தில் தென்மேற்குப் பருவமழை தொடங்கியுள்ளதால் அமராவதி அணையின் நீர்பிடிப்புப் பகுதிகளான பாம்பாறு, சின்னாறு, தேனாறு ஆகிய மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இதனால், அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து ஞாயிற்றுக்கிழமை மாலை 40 அடியை எட்டியது. இதனால், புதிய, பழைய ஆயக்கட்டுப் பாசனத்துக்கு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அணை நிலவரம்:

90 அடி கொள்ளளவு கொண்ட அணையில் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி நிலவரப்படி நீர்மட்டம் 39.83 அடியாக இருந்தது.

அணைக்கு வரத்தாக 325 கனஅடி வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 18 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

**பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாப்பது விவசாயிகளின் கடமை**

பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாக்க வேண்டியது விவசாயிகளின் கடமை என்றார் திருத்துறைப்பூண்டி பாரம்பரிய நெல் இயற்கை விவசாயி சி. கரிகாலன்.

புதுக்கோட்டையில் சக்சஸ் அறக்கட்டளையும், ஏசிடபிள்யூ, டபுள்யூ-யுகே அமைப்பும் இணைந்து ஞாயிற்றுக்கிழமை நடத்திய பாரம்பரிய நெல் விதை வழங்குதல், இயற்கை விவசாயம் தொடர்பான கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது:

நம் முன்னோர்கள் சாகுபடி செய்த பாரம்பரிய நெல் ரகங்கள் படிப்படியாக அழியத் தொடங்கியதால், ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளில் வளரும் உணவு தானியங்களைப் பயன்படுத்தும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். அதன் விளைவாக, மண் வளமும், நமது உடல் ஆரோக்கியமும் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது பயன்படுத்தி வரும் அரிசி ரகங்களை விட பல மடங்கு புரதச்சத்து, நார்ச்சத்து மிக்கது பாரம்பரிய நெல் ரகங்கள். பெரும்பாலான ஒட்டுரக நெல் வகைகள் நமது மண்ணுக்கும், சூழலுக்கும் ஏற்றதாக இல்லை. குறைந்த நாட்களில் அதிக விளைச்சல் என்ற நோக்கத்தில் கொண்டு வரப்பட்டவைதான் இந்த குட்டை ரக நெல்கள். ஆனால் பாரம்பரிய நெல் ரகங்கள், மாட்டுக்கு வைக்கோல், மண்ணுக்குத் தழைச்சத்து, விவசாயிக்கு நெல் ஆகிவற்றை உள்ளடக்கியதாக இருந்தன.

மேலும் மண் வளம், பூச்சி வளம், நீர் வளம், நம் உடல் வளம் ஆகியவற்றை காக்கும் வலிமையுடையது. சுமார் 160 பாரம்பரிய நெல் ரகங்கள் அனைத்தும் பசுமைப் புரட்சி என்ற பெயரில் மறைந்து போனது.

இந்நிலையில், இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரின் வழிகாட்டுதலுடன் புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகளால் பூங்கார், மாப்பிள்ளைச் சம்பா, கருடன் சம்பா, சிவப்பு கவுனி, பனங்காட்டு குடவாழை, கருத்தக்கார், சண்டிகார், கருங்குறுவை, குருவைக்களஞ்சியம், தூயமல்லி, தங்கச்சம்பா, நீலச்சம்பா, செம்புளிச்சம்பா, கிச்சடிச்சம்பா உள்ளிட்ட 24 வகையான பாரம்பரிய

நெல் ரகங்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. இதைப் பாதுகாக்க வேண்டியது நம் அனைவரின் கடமை என்றார்.

நிகழ்வுக்கு, சக்சஸ் அறக்கட்டளை இயக்குநர் ரெ. சுப்பிரமணியன் தலைமை வகித்தார். இயற்கை விவசாய முன்னோடி பயிற்சியாளர் மதுரை காமராஜ், ஆலோசகர் சி. தமிழ்செல்வன், என். சுப்பிரமணியன், எஸ். முருகேசன், பி. வசந்தா ஆகியோர் பேசினர். இதில் கலந்து கொண்ட பெண் விவசாயிகள் 100 பேருக்கு பாரம்பரிய நெல் விதைகள் வழங்கப்பட்டன.

## தஞ்சாவூரில் 2 நாள்களுக்கு வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகம் அருகேயுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையத்தில் வேலிதாண்டா வெள்ளாடு வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவம் குறித்த 2 நாள் பயிற்சி முகாம் செவ்வாய், புதன்கிழமைகளில் (ஜூன் 21,22) நடைபெறவுள்ளது.

காலை 9 மணி முதல் நடைபெறவுள்ள இப்பயிற்சிக்கு வரும் அனைவரும் தவறாமல் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அல்லது வேறு அடையாள அட்டை கொண்டு வரவேண்டும், மேலும் விவரங்களுக்கு 98424 55833, 04362 - 204009 ஆகிய எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மையத் தலைவர் என். புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### பருவமழை

**பல்வேறு மொழிகளில் பருவமழை** 'மழை' என்பதற்கு குளிர்ச்சி, நீர், கருமை, மிகுதி மாரி என சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அர்த்தம் கூறுகிறது. வடமொழியில் மழையை 'வர்ஷம்' என சொல்லுவர்.இது தான் இந்திக்கு 'வர்ஷா' என மருவியது.இது தவிர பர்சாத், பாரிஸ் போன்ற சொற்களும் இந்தியில் மழையைக் குறிக்கின்றன. இவை உருதுவில் இருந்து வந்த சொற்களாகும். இந்தியில் எல்லாச் சொற்களையும் ஆண்பால் சொற்கள், பெண்பாற் சொற்கள் என பிரித்துக் கூறும் வழக்கம் உள்ளது. அந்த வகையில் 'வர்ஷா' என்பது பெண்பால் சொல்லாக உள்ளது.

### மலை வாழை நடவில் மும்முரம் காட்டும் விவசாயிகள்

தாண்டிக்குடி: தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில் மலை வாழை நடவு பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

மலைப்பகுதியில் எதிர்பார்த்த கோடை மழை தாமதமாக பெய்தாலும் விவசாயத்திற்கு உகந்ததாக உள்ளது. இதையடுத்து மே முதல் ஆகஸ்ட் வரை மலை வாழைக் கன்றுகள் நடவு செய்யும் தருணமாகும்.

இதற்காக நிலத்தை பண்படுத்தி கன்றுகள் நடவு செய்து அதற்கு இடையில் ஊடுபயிராக கொத்துப் பீன்ஸ் நடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது நடவு செய்துள்ள கன்றுகள் ஓராண்டில் பலனுக்கு வரும். வாழையடி வாழையாக பெருகும் மலை வாழையில் வெளி வரும் பக்க கன்றுகளே நடவுக்கு பயன்படுத்துவர்.

விவசாயிகள் கூறுகையில்:

ஒரு கன்று பறித்து, நடவு செய்ய ரூ.50 ரூபாய் செலவு பிடிக்கிறது. இதற்கு பட்டை எடுத்தல், மண் அணைத்தல் போன்ற பணிகள் உள்ளன. காய்கள் வெட்டுவது வரை நோய் பாதுகாப்பு அவசியம். முடிக்கொத்து, செந்தாழை நோய் தாக்குதலால் இவ்விவசாயத்திற்கு சவாலாக உள்ளது.

இருந்தபோதிலும் மலை வாழை சாகுபடியை கைவிடாமல் ஆண்டுதோறும் கன்றுகள் புதுப்பிக்கும் பணியை இத்தருணத்தில் செய்வது வழக்கம், என்றார்.

## தக்காளி விலை உயர்வால் 2 கிராம் பழத்திற்கும் 'மவுசு'

வடமதுரை: தக்காளி விலை குறைந்த நேரத்தில் விளை நிலங்களிலேயே கழிக்கப்படும் மிக சிறியளவு பழங்களும், தற்போதைய விலை உயர்வால் கடைகளில் விற்கப்படுகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் வடமதுரை, அய்யலுார் உள்பட அனைத்து பகுதியிலும் தக்காளி விவசாயம் பரவலாக அதிகளவில் நடக்கிறது. தக்காளி பல நேரம் கடும் விலை வீழ்ச்சியை சந்திக்கும். அப்போது எடுப்பு கூலிக்கு கூட கட்டுப்படியாகாமல் வயல்களிலேயே பறிக்காமல் அழுக விடப்படும். சில நேரங்களில் திடீரென வரத்து குறைந்து, விலை உச்சத்திற்கு சென்று 'ஜாக்பாட்' கிடைக்கவும் வாய்ப்பு கிடைக்கும்.

2 கிராம் பழம்: கடந்த சில வாரங்களாக தக்காளி வரத்து குறைந்ததால், அய்யலுார் மார்க்கெட்டில் 15 முதல் 17 கிலோ வரையுள்ள பெட்டிக்கு ரூ. 1000 வரை சென்றது. சென்னை போன்ற பெரு நகரங்களில் சில்லரை விற்பனையில் கிலோ ரூ.100 வரை சென்றது. வடமதுரை போன்ற சிறு நகர் பகுதியில் கிலோ ரூ.80 வரை எகிறி, நேற்றைய நிலவரப்படி ரூ.50க்கு விற்கப்படுகிறது. பொதுவாக சாதாரண மிகவும் சிறிய பழங்கள் வயல்களிலேயே கழிக்கப்படுவது வழக்கம். தற்போதைய விலை உயர்வால் 2 கிராம் எடையுள்ள பழங்கள் கூட அய்யலுார் கடை வீதிகளில் கூறு கட்டி விற்கப்படுகிறது.

## மாவட்டத்தில் திடீர் மழை: அரவக்குறிச்சியில் 44.6 மி.மீ.,

கரூர்: மாவட்டத்தில் நேற்று முன்தினம் திடீரென மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். அரவக்குறிச்சி மட்டும் அதிகபட்சமாக, 44.6 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

கரூர் மாவட்டம் முழுவதும் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. கோடை காலம் முடிந்த நிலையிலும், பெரும்பாலான இடங்களில், வெப்பத்தின் தாக்கம் குறைந்தபாடு இல்லை. இருப்பினும் பல்வேறு இடங்களில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இதில், நேற்று முன்தினம் மாலை முதல் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்துள்ளது. இதன்படி, நேற்று காலை, 8 மணி வரை மாவட்டத்தில் அதிகபட்சமாக, அரவக்குறிச்சி, 44.6 மி.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு: க.பரமத்தி, 2.4 மி.மீ., அணைபாளையம், 40 மி.மீ., கடவூர், 12.2 மி.மீ., பாலவிடுதி, 13.6 மி.மீ., மயிலாம்பாடி, 32.3 மி.மீ., கரூர், 8.6 மி.மீ.,ஆகிய இடங்களில் மழை பதிவாகி உள்ளது.

## கொப்பரை தோங்காய் கொள்முதல் செய்வதில் சிரமம் கூடுதல் ஆவணங்கள் கோருவதால் விவசாயிகளுக்கு

தேனி: கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்ய கூடுதல் ஆவணங்கள் கோருவதால் விவசாயிகள் சிரமம் அடைந்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் வாழை, மா சாகுபடிக்கு அடுத்தாக அதிகளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இதில் ஆண்டிபட்டி பகுதியில் 2,010.63 ஏக்கர், போடியில் 6,533.63 ஏக்கர், சின்னமனுாரில் 5,415.63 ஏக்கர், கம்பம் 9,909.75ஏக்கர், உத்தமபாளையம் 7,403.25 ஏக்கர், தேனி 3,949.10 ஏக்கர், கடமலைக்குண்டு 5,741.45 ஏக்கர், பெரியகுளம் 8,850.50 ஏக்கர் உட்பட மொத்தம் 49,311.60 ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாநிலத்தில் இம் மாவட்டம் தென்னையில் 3வது இடத்தில் உள்ளது.

கட்டுபடியாகாத விலை

ஏக்கருக்கு 70 மரம் வீதம் மொத்தம் 34,51,812 மரங்கள் உள்ளன. மரத்திற்கு ஆண்டிற்கு சராசரியாக 80 காய்கள் காய்க்கும். ஆண்டுக்கு 27.61 கோடி காய்கள் வெட்டப்படுகிறது. ஒன்றில் 130 கிராம் முதல் 150கிராம் தேங்காய் கிடைக்கும்.

இதனை கொப்பரைக்கு காய வைத்தால் 90 முதல் 100 கிராம் வரை கொப்பரை தேங்காய் கிடைக்கும் என கணக்கீட்டுள்ளனர்.

தேங்காய் ஒன்று ரூ.5க்கு விற்பதால் விவசாயிகளுக்கு கட்டுப்படியாக வில்லை. இதனால் 45 நாட்களில் வெட்ட வேண்டிய காய் 60 முதல் 90 நாட்கள் வரை மரத்திலேயே வெட்டாமல் உள்ளனர். விவசாயிகளின் சிரமங்களை உணர்ந்து அரசு கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம் துவக்கியுள்ளது.

மாவட்டத்தில் ஜூன் 15ம் தேதி முதல் தேனி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை கொள்முதல் துவக்கப்பட்டுள்ளது. தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மூன்றில் ஒருபங்கு காய்களை மட்டுமே கொப்பரைக்கு வழங்க வேண்டும்.

விலை விபரம்

கொப்பரை தேங்காய்க்கு ஆதார விலையாக ஒரு கிலோ அரவை கொப்பரை ரூ.59.50காசுக்கும், பந்து கொப்பரை 62.40காசுக்கும் கொள்முதல் செய்ய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கொப்பரை தேங்காய் வழங்கும் விவசாயிகள் தென்னை சாகுபடி செய்துள்ளதற்காக வருவாய் துறை வழங்கும் பட்டா, சிட்டா. வேளாண்மை உதவி அலுவலர், உதவி இயக்குனர் வழங்கும் சாகுபடி பயிர் விபரம், உற்பத்தி விபரம் அடங்கிய சான்றுடன் கொப்பரை கொண்டு வரவேண்டும். காய் ஈரபத தன்மை சான்றினை வேளாண் விற்பனை குழு அதிகாரிகள் வழங்கும் சான்றின் அடிப்படையில் கொள்முதல் செய்யப்படும்.

விவசாயிகள் கூறுகையில்: பல விவசாயிகள் நில உரிமையாளரிடம் இருந்து தேங்காய் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு எடுப்பதற்கு குத்தகைக்கு எடுத்து உள்ளனர். இவர்கள் பெயரில் பட்டா, சிட்டா பெறுவதில் சிரமம் ஏற்படும். தென்மேற்கு பருவமழை துவங்கிய நிலையில் காய்களை உலர வைப்பதில் சிக்கல் உள்ளது.

உலர வைக்க வசதியான குடோன்கள் கொள்முதல் நிலையத்தில் உள்ளதா என தெரியவில்லை. அதிகாரிகள் கோரும் பல சான்றுகள் பெற்று கொப்பரை கொண்டு வருவதற்கும் 15 நாட்கள் வரை ஆகும்.

எனவே, விவசாயிகள் கோரும் சான்றுகளை அதிகாரிகள் தாமதம் செய்யாமல் வழங்க வேண்டும் என்றனர்.

அதிகாரிகளின் சான்றுகள் பெறும் நடைமுறையால் கொள்முதல் நிலையம் துவங்கி 5 நாட்கள் ஆகியும் யாரும் கொப்பரை தேங்காய் கொள்முதலுக்கு கொண்டு வரவில்லை.

## கால்நடைகளுக்கு கோமாரி நோய்

வருஷநாடு: முத்தலாம்பாறையில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கி வருவதால் கால்நடை வளர்ப்போர்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

முத்தலாம்பாறை ஊராட்சியில் தொப்பையாபுரம், கருப்பையாபுரம், தர்மசாஸ்தாபுரம்,பசும்பொன்நகர், பேச்சியம்மான்கோவில்பட்டி உட்பட 20க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் உள்ளது. இக் கிராமங்களில் விவசாயத் திற்கு அடுத்து கால்நடை வளர்ப்பில் பொது மக்கள் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர். சில நாட்களாக இப் பகுதி கறவை மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்கி வருகிறது. இந் நோய் தாக்குவதால் கறவை மாடுகளுக்கு வாய்ப்புண் ஏற்பட்டு பால் கறக்க முடியாமல் சிரமப்படுகிறது. இதனால் கால்நடை வளர்ப்போர் உரிய சிகிச்சை கிடைக்காமல் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். கோமாரி நோய் தாக்கிய கறவை மாடுகளுக்கு சிகிச் சை அளிக்க கால்நடைத் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கால்நடை வளர்ப்போர் கோருகின்றனர்.

## மேட்டூர் அணை நீர்வரத்து அதிகாலை திடீர் அதிகரிப்பு

தமிழக எல்லையில் உள்ள நீர்பிடிப்பு பகுதியில், நேற்று முன்தினம் இரவு பருவமழை தீவிரம் அடைந்ததால், நேற்று காலை காவிரியில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. நேற்று முன்தினம் ஓடை போல காட்சியளித்த காவிரியாற்றில், நேற்று காலை தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது, கரையோர மக்கள் மத்தியில் திடீர் பரபரப்பை ஏற்படுத்தியது. மேட்டூர் அணை பண்ணவாடி துறையில் இருந்து, மறுகரையிலுள்ள நாகமறைக்கு மக்கள், பரிசல் மூலம் காவிரியாற்றை கடந்து செல்கின்றனர். நேற்று, காவிரியாற்றில் நீர்வரத்து அதிகரித்ததால்,

பயணிகளின் பரிசல்கள் தாமதமாக இயக்கப்பட்டது. கூடுதல் நீர்வரத்தால் நேற்று முன்தினம், 124 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 392 கனஅடியாக அதிகரித்தது. நீர்மட்டம், 42.46 அடியாக இருந்தது.



மேட்டூர்: நீர்பிடிப்பு பகுதியில் தீவிரம் அடைந்த பருவமழையால், நேற்று அதிகாலை, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது, திடீர் பரபரப்பை ஏற்படுத்தியது.

## அன்னாசிப்பழம் விலை அதிகம்

ராமநாதபுரம்: கேரளாவில் இருந்து அன்னாசிப்பழம் வரத்து அதிகரித்தாலும் விலை அதிகமாக உள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் கேரள மாநிலம் கொல்லம் திருவனந்தபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அன்னாசிப்பழம் விற்பனைக்கு வருகிறது. வாரம் சுமார் 5 டன் வரை விற்பனைக்கு வந்தாலும் விலை மட்டும் குறையவில்லை. தற்போது, ராமநாதபுரம் மார்க்கெட்டில் கிலோ அன்னாசிப்பழம் ரூ.50க்கு விற்கப்படுகிறது.

கீழக்கரையை சேர்ந்த பழவியபாரி முருகேசன் கூறியதாவது:

கடந்த சில ஆண்டுகளாக மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளேன். கேரளாவில் அன்னாசிப்பழம் விளைச்சல் அதிகமாக இருக்கும் மாதங்களில் அங்கு சென்று வாங்கி வந்து இங்குள்ள சில்லரை வியாபாரிகள், தள்ளுவண்டி வியாபாரிகளிடம் விற்பனை செய்வேன்.

வாரத்திற்கு 2 டன் அன்னாசிப்பழம் விற்பனைக்கு கொண்டு வருவேன். தற்போது, விலை அதிகமாக உள்ளது. கேரளாவில் எனது, கொள்முதல் விலையே ரூ.38 ஆகிறது. இங்கு சில்லரையில் ரூ.50 வரை விற்கின்றனர். இன்னும் இரண்டு மாதங்கள் சென்றால் விலை குறையும், என்றார்.

## 3 கோடி டன் கழிவுகளில் இருந்து 14 லட்சம் டன் காளான் உற்பத்தி

ராமநாதபுரம்; மூன்று கோடி டன் பண்ணை கழிவுகளில் இருந்து ஆண்டுக்கு 14 லட்சம் டன் காளான் உற்பத்தி செய்யலாம், என ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் ராஜசேகரன் கூறினார்.

அவர் கூறியதாவது:

ராமநாதபுரம் உட்பட வறண்ட மாவட்டங்களில் நிலத்தடி நீர் பாசன வசதிக்கு ஏற்றதாக இல்லை. விவசாயத்தை மட்டும் நம்பினால் லாபகரமாக இருக்காது. இதனால் மாற்று திட்டம் மூலம் வருவாயை உயர்த்தி விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்த மத்திய, மாநில அரசுகள் கடந்த பல ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்துள்ளன. விளைச்சல் இரு மடங்கு, வருமானம் 3 மடங்கு என்ற தமிழக அரசின் இலக்கை முனைப்புடன் அடைந்து வருகிறோம்.

விவசாயம் சார்ந்த உப தொழிலை விவசாயிகள் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இயற்கை வளங்களை முறையாக பயன்படுத்தினால் அபரீத லாபம் பெறலாம். ராமநாதபுரம் மாவட்ட மண்ணின் தன்மைக்கேற்ப பால் காளான் வளர்ப்பை உப தொழிலாக செய்தால் தின வருமானம் அதிகரிக்கும். புரத சத்து, மருத்துவ குணம் அதிகமுள்ளதால் சந்தையில் நியாயமான விலை கிடைக்கும்.

விவசாயிகள் அச்சமின்றி பால் காளான் வளர்ப்பில் ஈடுபடலாம். தமிழகத்தில் 30 கோடி டன் பண்ணை கழிவுகளில் 10 சதவீதத்தை( 3 கோடி டன்) பயன்படுத்தி ஆண்டுக்கு 14 லட்சம் டன் காளான் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது. 25 சதவீத பண்ணை கழிவுகளை முறையாக பயன்படுத்தினால் 400 மில்லியன் டன் காளான் உற்பத்தி செய்ய

இயலும். காளான்களை அறுவடை செய்தபின் எஞ்சிய பொருட்களை இயற்கை உரமாக பயன்படுத்திக்கொள்ளலாம், என வேளாண் பல்கலை ஆய்வில் தெரியவந்துள்ளது, என்றார்.-

**வத்தல் குவிண்டாலுக்கு ரூ 500 விலை வீழ்ச்சி**

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலத்தில் நடைபெற்ற மிளகாய் சந்தைக்கு 20 குவிண்டால் குண்டு மிளகாய் வத்தல் வந்திருந்தது.

கடந்த வாரம் குவிண்டால் ரூ.18 ஆயிரத்திற்கு விற்பனையான முதல் தர பெரிய குண்டு வத்தல் ரூ.500 விலை வீழ்ச்சியடைந்து 17ஆயிரத்து 500க்கு விற்றது.

குவிண்டால் ரூ.16 ஆயிரத்து 500க்கு விற்ற இரண்டாம் தர சிறிய குண்டு வத்தல் ரூ.500 விலை வீழ்ச்சியடைந்து ரூ.16 ஆயிரத்திற்கு விற்றது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**2,200 மூட்டை மஞ்சள் ரூ. 1.05 கோடிக்கு விற்பனை**



திருச்செங்கோடு: திருச்செங்கோட்டில் நடைபெற்ற ஏலத்தில் 2,200 மூட்டை மஞ்சள் ரூ.1.05 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது. நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் செயல்பட்டு வரும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், நடந்த ஏலத்தில் 30க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர்.

ஏலத்தில் ரூ.1.05 கோடிக்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.8,099 முதல் ரூ.10,600 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ.7800 முதல் ரூ.8909 வரையும், பனங்காளி ரகம் ரூ.10199 முதல் அதிகபட்சமாக ரூ.24,299 வரையும் ஏலம் போனது. மொத்தம் 2200 மூட்டை மஞ்சள் ரூ.1.05 கோடிக்கு விற்பனையானது.

## தர்மபுரி சந்தையில் அரளிப்பூ விற்பனை ஜோர்

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் அரளிப்பூ அறுவடை தீவிரமடைந்துள்ளது. இதனால் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. தர்மபுரி நகரம் மற்றும் மாவட்டம் முழுவதும் 1300க்கும் மேற்பட்ட ஏக்கரில், மலர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தொப்பூர், நல்லபள்ளி, சோகத்தூர், அதகப்பாடி, பொம்மிடி, சோலைக்கொட்டாய் மற்றும் காரிமங்கலம், பென்னாகரம், பாலக்கோடு, மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் உள்ளிட்ட பகுதிகளில் பூக்கள் அதிகம் உற்பத்தியாகின்றன.

மல்லி, முல்லை, துளசி, கனகாம்பரம், அரளி, கோழிக்கொண்டை என அனைத்து பூக்களும் உற்பத்தி செய்யப்பட்டு, தர்மபுரி பூ மார்க்கெட்டிற்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. தேசிய நெடுஞ்சாலையில் தொப்பூர்- காரிமங்கலம் (52 கிலோ மீட்டர்) வரை அரளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், கிடைக்கும் பூக்களை பறித்து வந்து தர்மபுரி சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர். அறுவடை செய்யப்படும்

அரளி பூக்கள் பெங்களூர், சென்னை, திருப்பதி போன்ற நகரங்களுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. நேற்று ஒரு கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

<u>தஞ்சாவூர்</u>

**தஞ்சையில் 24ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தஞ்சை, : தஞ்சையில் விவசாயிகள் குறைத்தீர்க்கும் கூட்டம் வரும் 24ம் தேதி நடக்கிறது. கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் நடைபெறும் கூட்டத்துக்கு கலெக்டர் சுப்பையன் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு திட்ட விளக்கம் அளிக்கப்படவுள்ளது. மேலும் கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் நீர்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துக்களை மட்டும் தெரிவிக்கலாம்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பங்கேற்று கருத்து தெரிவிக்க விரும்பும் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் தங்கள் பெயர், ஊர் மற்றும் வட்டாரத்தை காலை 9 முதல் இரவு 10 மணி வரை கணினியில் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவசாயிகள் அளிக்கும் கோரிக்கை மனுக்களை கணினியில் பதிவு செய்து ஒப்புதல் பெற்று பின் மனுக்களை அளிக்க வேண்டும். இவ்வாறு கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விலையை கட்டுக்குள் வைக்க 30 லட்சம் டன் பருப்பு இறக்குமதி வியாபாரிகள் ஒப்பந்தம்



புதுடெல்லி,

தமிழ்நாட்டில் துவரம்பருப்பு விலை கிலோ ரூ.220 அளவுக்கு உயர்ந்தது. இதே விலை உயர்வு, நாட்டின் பிற மாநிலங்களிலும் நிலவியது. அதிகம் விளைகின்ற பிற மாநிலங்களில் இருந்து பருப்பு வரத்து அதிகரித்து இருப்பதால் விலை கொஞ்சம் இறங்கி உள்ளது.

இந்த நிலையில் நாடு முழுவதும் பருப்பு வகைகள் விலையை தொடர்ந்து கட்டுக்குள் வைக்க ஏதுவாக பருப்பு வியாபாரிகள் 30 லட்சம் டன் பருப்பு இறக்குமதி செய்ய முடிவு செய்தனர். இது தொடர்பாக அவர்கள் ஒப்பந்தம் செய்துள்ளனர்.

இதுபற்றி இந்திய பருப்பு, தானியங்கள் சங்கத்தின் துணைத்தலைவர் பீமல் கோத்தாரி கூறும்போது, ‘‘கடந்த ஆண்டு 57 லட்சம் டன் பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டன. இந்த ஆண்டு 30 லட்சம் டன் பருப்பு இறக்குமதிக்கு ஒப்பந்தம் போட்டுள்ளோம். ஆகஸ்டு மாதம் தொடங்கி டிசம்பர் மாதத்துக்குள் இந்த பருப்பு வகைகள் வந்து சேரும். இந்த பருப்பு வகைகளில் துவரம் பருப்பு, பட்டாணி பருப்பு, வெள்ளை கொண்டை கடலை உள்ளிட்டவை அடங்கும்’’ என்றார்.

இதற்கிடையே இறக்குமதி செய்து, பதுக்குவதை தடுக்கிற விதத்தில் பருப்பு இறக்குமதி மத்திய புலனாய்வு அமைப்புகளின் கண்காணிப்பின் கீழ் வந்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

**கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டில் தக்காளி, பச்சை மிளகாய் விலை சரிவு**



சென்னை கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டில் தக்காளி, பச்சை மிளகாய் விலை சரிந்துள்ளது.

தக்காளி, பச்சை மிளகாய் விலை சரிவு

சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர் ஆகிய 3 மாவட்டங்களுக்கு காய்கறி வினியோகம் செய்யும் தளமாக கோயம்பேடு மார்க்கெட் விளங்கி வருகிறது. இங்கு தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்தும் காய்கறிகள் விற்பனைக்கு வருவது வழக்கம்.

கோயம்பேடு மார்க்கெட்டில் சில நாட்களாக தக்காளி விலை கிடுகிடுவென உயர்ந்தது. ரூ.120 வரை விலை உயர்ந்து காணப்பட்டது. தற்போது தக்காளி வரத்து அதிகரித்து உள்ளதால் அதன் விலையும் படிப்படியாக சரிவடைந்து வருகிறது. இதேபோல பச்சை மிளகாய் வரத்தும் அதிகரித்து இருப்பதால் அதன் விலையும் குறைந்துள்ளது.

லாரி வாடகை உயர்வு

கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்றைய காய்கறி விலை குறித்து காய்கறி மொத்த வியாபாரிகள் சங்க ஆலோசகர் வி.ஆர்.சவுந்தரராஜன் கூறியதாவது:–

மத்திய அரசு ஆட்சிக்கு வந்து இதுவரை 12 முறை டீசல் விலையை கூட்டியது. இதனால் லாரி வாடகை சுமார் 20 சதவீதம் உயர்ந்தது. இதையொட்டி காய்கறிகள் விலையும் அதிகரித்தது.

தற்போது தக்காளி, பல்லாரி வெங்காயம், பச்சை மிளகாய் போன்ற காய்கறிகள் விலை குறைந்து வருகிறது. இருந்தபோதிலும் முருங்கைக்காய் விலை அதிகரித்துள்ளது.

விலை நிலவரம்

நேற்று முன்தினம் ரூ.70 வரை விற்பனையான தக்காளி நேற்று ரூ.50–க்கும், ரூ.100–க்கு விற்கப்பட்ட பச்சை மிளகாய் ரூ.30–க்கும் சரிவடைந்தது. இதே போல் ரூ.40–க்கு விற்பனையான கேரட் ரூ.30–க்கும், ரூ.40–க்கு விற்பனை செய்யப்பட்ட சவ்சவ் ரூ.35–க்கும், ரூ.25–க்கு விற்பனையான முட்டைகோஸ் ரூ.20–க்கும், ரூ.50 வரை விற்பனையான சேனைக்கிழங்கு ரூ.35–க்கும், ரூ.40–க்கு விற்பனை செய்யப்பட்ட வெண்டைக்காய் ரூ.35–க்கும், ரூ.30–க்கு விற்பனை செய்யப்பட்ட கோவைக்காய் ரூ.20–க்கும், ரூ.60–க்கு விற்பனை செய்யப்பட்ட இஞ்சி ரூ.55–க்கும் குறைந்து விற்பனையானது.

ஆனால் ரூ.80 வரை விற்பனையான முருங்கைக்காய் ரூ.120 ஆகவும், ரூ.70–க்கு விற்பனையான பீன்ஸ் ரூ.80 ஆகவும், ரூ.50–க்கு விற்பனை

செய்யப்பட்ட அவரைக்காய் ரூ.60 ஆகவும் அதிகரித்தது. சாம்பார் வெங்காயம், காலிபிளவர், முள்ளங்கி, புடலங்காய், வாழைக்காய், பீர்க்கங்காய், சுரைக்காய், கொத்தவரங்காய் போன்ற காய்கறிகளின் விலையில் எந்த மாற்றமும் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## தோட்டக்கலைத்துறை சார்பில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் கிருஷ்ணகிரி கலெக்டர் கதிரவன் நேரில் ஆய்வு



ஓசூர், சூளகிரி வட்டாரங்களில் தோட்டக்கலைத்துறை சார்பில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களை கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் கதிரவன் நேரில் ஆய்வு செய்தார்.

**கலெக்டர் ஆய்வு:** ஓசூர், சூளகிரி ஒன்றியத்திற்கு உட்பட்ட நல்லராலப்பள்ளி, தோரிப்பள்ளி, உஸ்தனப்பள்ளி, திருச்சிப்பள்ளி, சூடகொண்டப்பள்ளி, சொக்கரசனப்பள்ளி ஆகிய கிராமங்களில் தோட்டக்கலைத்துறை மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டங்களின் கீழ் 50 சதவீத மானியத்தில் பசுமை குடில்கள் அமைத்து குடை மிளகாய், ரோஜா, சாமந்தி ஆகியவற்றை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். அதை மாவட்ட கலெக்டர் கதிரவன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். முதலில் ஜீனூர் அரசு தோட்டக்கலை பண்ணையில் உயர் ரக மிளகாய் நாற்றுகளை பார்வையிட்டார். தொடர்ந்து சூளகிரி, ஓசூர் ஒன்றியத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களை கலெக்டர் கதிரவன் பார்வையிட்டார்.

முன்னேற்றம் அடைய வேண்டும்

பின்னர் விவசாயிகளிடம் பேசிய கலெக்டர் கதிரவன், "பசுமை குடில் அமைக்கவும், சொட்டு நீர் பாசனம் அமைக்கவும் அரசு மானியங்கள் வழங்கி வருகிறது. எனவே விவசாயிகள் அரசின் மானியங்களை பெற்று புதிய தொழில் யுக்திகளை பயன்படுத்தி தரமான காய்கறிகள் மற்றும் மலர் உற்பத்தி செய்து பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின் போது தோட்டக்கலை துறை துணை இயக்குனர் சீனிவாசன், உதவி இயக்குனர்கள் அருள்முருகன், சிவமாரப்பா, அனந்தபத்மநாபன், உதவி வேளாண்மை அலுவலர்கள் திருமுருகன், மகாதேவன் ஆகியோர் உடன் இருந்தனர்

## அறந்தாங்கி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை கொள்முதல் நிலையம் தொடக்கம்

அறந்தாங்கி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதாவால் அறிவிக்கப்பட்ட அரசு ஆதார விலைத்திட்டம் 2016-ன்படி தென்னை விவசாயிகளின் கொப்பரை கொள்முதல் நிலைய தொடக்க விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளரும், மாமண்டல அலுவலருமான பாலமுருகன் கொள்முதல் நிலையத்தை பார்வையிட்டு பேசுகையில், தென்னை விவசாயிகள் உற்பத்தி செய்த கொப்பரை தேங்காய்களை 6 சதவீதத்திற்கு மிகாமல் ஈரப்பதம் இருக்குமாறு கொண்டு வர வேண்டும். மேலும் பந்து

கொப்பரை கிலோ ஒன்றிற்கு ரூ.62.40-க்கும், எண்ணெய் கொப்பரை கிலோ ஒன்றிற்கு ரூ.59.50-க்கும் கொள்முதல் செய்ய ஆதார விலை தமிழக அரசால் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இதன்படி கொள்முதல் செய்யப்படும் கொப்பரை தேங்காய்களுக்கு 3 நாட்களுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்படும்.



மேலும் இந்த சங்கத்தில் பதிவு செய்த விவசாயிகள் அடையாள அட்டையை புதுப்பிக்க கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்று சங்கத்தில் ஒப்படைக்க வேண்டும். புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப படிவத்தை அறந்தாங்கி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பெற்று வருகிற ஜூலை மாதம் 15-ந் தேதிக்குள் வழங்க வேண்டும், என்றார். இதில் மண்டல இணைப்பதிவாளர் மிருணாளினி, மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் பால்வடிவு, வேளாண் துணை இயக்குனர் சிங்காரம், மண்டல மேலாளர் கருணாநிதி, துணை பதிவாளர்கள் ராஜன், மாராட்சி, செந்தில்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை சங்க செயலாளர் சுப்பிரமணியன் செய்திருந்தார்.